**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 133/2018 .** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : ராமர் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.12.2023

---

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டி நேதாஜி நகரில் குடியிருந்து வருகிறேன். விபத்து இறந்த போன நபரை நான் சம்பவத்திற்குமுன்பு நான் பார்த்திருக்கிறேன். அவர் உசிலம்பட்டி கீழப்புதுரை சேர்ந்தவர். சாட்சிகள் துரை, பிரவீன் ஆகியோரை எனக்கு தெரியும், 20.08.2016 ம் தேதி மாலை 6.50 மணியளவில் நான் மேற்சொன்ன சாட்சிகளுடன் SOR ேஹாண்டா ஷோ ரூம் அருகே நின்றிருந்தபோது விபத்தில் இறந்துபோன மகேந்திரன் அவர் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்காக ரோட்டின் வடபுறம் போய் கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த அரசு பேருந்து முன்னால் சென்ற லாரியை முந்துவதற்காக ஓவர் டேக் செய்து வந்து இருசக்கர வாகனத்தில் சென்றவர் மீது மோதியதில் கிழே விழுந்து விட்டார் அவருக்கு முன் தலையிலும் பின் தலையிலும் அடிபட்டு காதில் ரத்தம் வந்தது. பேருந்து அங்கே நின்றது. அவர் கீழே இறங்கி போய்விட்டார். நான் ஆஜர் எதிரியை காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். சம்பவ இடத்திலேயே காயம்பட்ட நபர் இறந்து விட்டார். அதன்பின்பு அவர் வீட்டிற்கு அங்கிருந்த கீழப்புதுரை சேர்ந்த நபர்கள் தகவல் சொன்னார்கள், பின்னர் அவரை ஆம்புலன்ஸ்சில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நானும் மருத்துவமனைக்கு சென்றேன். நான் காவல் நிலையத்திற்கும் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் பூக்கடை வைத்துள்ளேன். SOR ேஹாண்டா ஷோ ரூம் மதுரை

தேனி மெயின் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது. மதுரை தேனி மெயின் ரோடு ஒரு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். ரோட்டின் அகலம் சுமார் 60 அடி இருக்கும் என்றால் 40 அடி இருக்கும். SOR ஹோண்டா ஷோ ரூமிற்கு அருகில் நாங்கள் நின்று பேசி கொண்டிருந்தோம். டம் என்று சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவ நடைபெற்ற சமயம் சுமார் 6.50 மேல் இருக்கும். அடிபட்ட பின்பு நாங்கள் மூன்று பேர் தான் முதலில் போய் பார்த்தோம். நாங்கள் போய் பார்த்த பின்பு தான் விபத்து யாருக்கு ஏற்பட்டது என்று தெரியவந்தது. விபத்து ஏற்பட்ட குறித்து அங்கிருந்த கீழப்புதுார் காரர்கள் தான் அவர் வீட்டிற்கு தகவல் சொன்னார்கள். இறந்த நபருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றும் விபத்து சமயத்தில் அவருக்கு பேருந்து வருவதை கவனிக்காமல் சாலையை திடீரென குறுக்கே கடந்ததால் தான் தவிர்க்க இயலாதபடி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

S.d./Ramar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.